# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)முன்னோடிப் பரீட்சை - 2017

| தரம் : 11 | சைவநெறி | நேரம் : 1.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் : ...................................................................................... 22 T I

**கவனிக்க:**

i) எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

ii) 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

iii) உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தின் உள்ளே புள்ளடியை ( × ) இடுக.

## பகுதி - I

* பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

01. சிவனது தேர் அச்சை ஒடித்தவர்
   1) பிள்ளையார் 2) முருகன் 3) சூரன் 4) கஜமுகாசுரன்

02. சமகாலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள் யாவர்?
   1) சுந்தரர், சமபந்தர் 2) அப்பர், சம்பந்தர்
   3) சுந்தரர், மாணிக்கவாசகர் 4) சுந்தரர், அப்பர்

03. கடவுளுக்குரிய இரு நிலைகள்
   1) பதிமுதுநிலை, அருளது நிலை 2) அருவம், உருவம்
   3) சொரூபநிலை, தடத்தநிலை 4) ஆரம்பநிலை, இறுதிநிலை

04. உத்தராயணம் எனப்படும் காலப்பகுதி
   1) ஆடி 1ம் திகதி - மார்கழி 31 வரை 2) ஆனி 30 - மார்கழி 30 வரை
   3) தை 1 - ஆனி 30 வரை 4) தை 1 - தை 31 வரை

05. ‘விளக்கீடு காணாது போதியோ பூம்பாவாய் என்று பாடியவர்
   1) சம்பந்தர் 2) அப்பர் 3) சுந்தரர் 4) மணிவாசகர்

06. புற இருள் களைந்து ஒளி பரப்பும் அக இருள் போக்கி ஞானத்துடன் பரப்பும் விரத நாள் எது?
   1) மகாசிவராத்திரி 2) கார்த்திகை விளக்கீடு
   3) தைப்பூசம் 4) தீபாவளி

07. குஞ்சிதபாதம் தாங்கிய கடவுளும், குறிக்கும் தொழிலும்
   1) சிவலிங்கம் – காத்தல் 2) பிள்ளையார் – படைத்தல்
   3) அம்பிகை – அருளல் 4) நடராஜர் – அருளல்

08. தியானம் என்பது
   1) பண்ணோடு தோத்திரப்பாடல்களைப் பாடல்.
   2) இறைவனின் நாமங்களை உரக்க உச்சரித்தல்.
   3) வேதபாராயணம் செய்தல்.
   4) மனதை ஒருநிலைப்படுத்தி இறை நிலையில் நிற்றல்.



kalvi.lk

09. வரலட்சுமி விரதத்தில் பூஜைக்குப் படைக்க வேண்டிய பொருட்கள் அடங்குபவை
1) பருப்பு பாயாசம், உழுந்துக் கொழுக்கட்டை, வாழைப்பழம்.
2) அரிசிப்பாயாசம், பயறுக்கொழுக்கட்டை, மோதகம்.
3) வெற்றிலை, பாக்கு, சர்க்கரை அமுது.
4) மோதகம், வடை, முறுக்கு

10. புலிக்கால் முனிவர் என அழைக்கப்படுபவர் யார்?
1) அகத்தியர் 2) வியாக்கிரமபாதர் 3) பதஞ்சலி 4) வியாசர்

11. தொண்டரடிப்பொடியாழ்வாரின் இளமைப்பெயரும், அவர் பாடிய பாசுரமும்
1) விப்ரநாராயணர் - திருமலை
2) விஷ்ணுசித்தர் - திருப்பல்லாண்டு
3) திருமங்கைமன்னன் - திருப்பள்ளியெழுச்சி
4) விப்ரநாராயணர் - அமலன் ஆதிப்பிரான்

12. காசியில் மடம் அமைத்த பெரியாரும், அவர் பாடிய நூலும் முறையே
1) ஞானசம்பந்தர் - தேவாரம்
2) குமரகுருபரர் - மதுரை மீனாட்சி பிள்ளைத்தமிழ்
3) மெய்கண்டதேவர் - சிவஞானபோதம்
4) குமரகுருபரர் - கந்தரனுபூதி

13. மெய்கண்டாரின் இளமைப்பெயர்
1) சதாசிவன் 2) மருதச்சம்பந்தர்
3) திருமறைக்காடர் 4) சுவேதனப்பெருமான்

14. ஞானத்தின் நான்கு படிநிலைகளும் எவை?
1) பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி
2) கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டைகூடல்
3) பரஞானம், அபரஞானம், கலைஞானம், சிவஞானம்
4) அணிமா, லகிமா, மகிமா, கரிமா

15. சந்தானகுரவர் பணிகளை ஏற்று தொழிற்பட்டு வரும் நிறுவனம்
1) நல்லை ஆதீனம் 2) தர்மபுர ஆதீனம்
3) திருவாவடுதுறை 4) குமரகுருபரர் ஆதீனம்

16. மகேந்திர மலையில் இருந்து சிவபெருமானால் அருளிய நூல் எது?
1) திருமந்திரம் 2) சிவாகமம்
3) சிவஞானபோதம் 4) வேதம்

17. ஆகமங்களில் காணப்படும் விடயங்கள் அல்லாதன.
1) கோயில்கிரியை 2) வழிபடுவோரின் கடமைகள்
3) சிற்பாசிரியார் ஒழுக்கம் 4) யாகம் செய்யும் முறை

18. பயன்கருதாது செய்யும் வினை எவ்வாறு அழைக்கப்படும்?
1) நல்வினை 2) பற்றற்றவினை
3) செய்வினை 4) தீவினை

19. திருப்பனந்தாளில் சரிந்த சிவலிங்கத்தை தன் கழுத்தில் கயிறிட்டு இழுத்து நிமிர்த்தியவர் யார்?
1) சம்பந்தர் 2) நாவுக்கரசர்
3) குங்கிலியக்கலயர் 4) சேக்கிழார்

20. மாதத்தில் இருமுறை வரும் நைமித்திய கிரியையும் விரதமும் அல்லாதது?
1) சதுர்த்தி 2) பிரதோசம் 3) பௌர்ணமி 4) ஏகாதசி



kalvi.lk

21. சொற்கோவும், தோணிபுரத் தோன்றலும் இணைந்து பணி செய்த ஆலயங்கள்
   1) சீர்காழி, சிதம்பரம்
   2) கோணேச்சரம், கேதீச்சரம்
   3) ஒட்டிசுட்டான், கொக்கட்டிச்சோலை
   4) திருவீழிமிழலை, திருமறைக்காடு

22. நம்பியாண்டார் நம்பி அருளிய நூல் எது?
   1) திருத்தொண்டர் தொகை
   2) திருத்தொண்டர் திருவந்தாதி
   3) கோயில் நான்மணி மாலை
   4) திருமுருகாற்றுப்படை

23. ஒருவன் பிறப்பு முதல் இறப்பு வரை ஆற்றும் கிரியைகள்
   1) நித்திய கிரியை
   2) அபரக் கிரியை
   3) நைமித்திய கிரியை
   4) பூர்வக்கிரியை

24. வேதத்தின் கர்ம காண்டப் பகுதிகள் எவை?
   1) ஆரணியம், பிராமணங்கள்
   2) சங்கிதைகள், பிராமணங்கள்
   3) உபநிடதங்கள், பிராமணங்கள்
   4) ஆரணியங்கள், உபநிடதங்கள்

25. உமாபதி சிவாச்சாரியார் எழுதிய புராண நூல்கள் எவை?
   1) திருமுறை கண்ட புராணம், திருத்தொண்டர் புராணம், திருமுறை கண்ட புராணம்
   2) கோயிற் புராணம், சேக்கிழார் புராணம், திருமுறை கண்ட புராணம்
   3) திருவிளையாடற் புராணம், கோயிற்புராணம், சேக்கிழார் நாயனார் புராணம்
   4) திருமுறை கண்ட புராணம், கோயிற் புராணம், திருச் செந்தூர் புராணம்

26. சிவபூசை செய்வதற்கான தகுதியளிப்பது
   1) விசேட தீட்சை
   2) நிர்வாண தீட்சை
   3) சமய தீட்சை
   3) நயன தீட்சை

27. ஈழத்தில் பழமையான பஞ்ச ஈஸ்வரங்களில் வடக்கிலுள்ள ஈஸ்வரம் எது?
   1) மாமாங்கேச்சரம்
   2) சந்திரசேச்சரம்
   3) நகுலேச்சரம்
   4) திருக்கோணேச்சரம்

28. ஆயுட்காரன் என அழைக்கப்படும் கிரகம்?
   1) குருபகவான்
   2) சனீஸ்வரன்
   3) சுக்கிரன்
   4) சூரியன்

29. கார்த்திகை மாத தேய்பிறை தொடக்கம் மார்கழி மாத ஷஷ்டி வரை அனுட்டிக்கும் விரதம் எது?
   1) கந்த சஷ்டி
   2) கேதார கௌரி விரதம்
   3) சதுர்த்தி
   4) விநாயகர் சஷ்டி

30. உருத்திரனின் கண் போன்று அமைவது?
   1) விபூதி
   2) பூமி
   3) உருத்திராக்கம்
   4) சந்திரன்

31. பூங்கோயில் அமைந்திருக்கும் இடம் எது?
   1) திருவாமூர்
   2) திருவாரூர்
   3) திருவெற்றியூர்
   4) பூம்புகார்

32. கூத்துக் கலைக்கு ஊக்கமளித்த பேராசிரியர்
   1) சு.வித்தியானந்தன்
   2) சு.சண்முகதாஸ்
   3) பொ.கைலாசபதி
   4) க.சிற்றம்பலம்

33. சிவாயநம என்னும் ஐந்தெழுத்தில் "சி" குறிப்பது
   1) திருவருட்சக்தி
   2) சிவம்
   3) ஆன்மா
   4) திரோதானசக்தி

34. கண்ணகி அம்மன் ஆலயம் அமைந்த ஊர்கள்
   1) கண்டி, அங்கணாக்கடவை, வற்றாப்பளை
   2) சுட்டிபுரம், மட்டுவில், யாழ்ப்பாணம்
   3) நீர்கொழும்பு, சிலாபம், பளுகாமம்
   4) புங்குடுதீவு, செட்டிகுளம், செட்டிப்பாளையம்



kalvi.lk

35. ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் என்று வித்தியா தானத்தை சிறப்பித்தவர்
1) மகாகவி 2) பாரதிதாசன் 3) விபுலானந்தர் 4) திருமூலர்

36. கடல்நீரில் விளக்கேற்றும் அற்புதம் மிக்க ஆலயம் அமைந்த இடம்
1) வற்றாப்பளை 2) மட்டுவில்
3) கண்டி 4) காரைதீவு

* **அட்டவணையில் A இலிருந்து I வரையிலான தகவல்களின் உதவியுடன் 37, 38, 39 ஆம் வினாக் களுக்கான விடைகளைத் தெரிவு செய்க.**

| | | |
|---|---|---|
| **A** - விபுலானந்தர் | **D** - மெய்கண்டதேவர் | **G** - நாவுக்கரசர் |
| **B** - சுவேதனப்பெருமாள் | **E** - முத்தமிழ் வித்தகர் | **H** - பரஞ்சோதி முனிவர் |
| **C** - வாகீசர் | **F** - வாக்கின் மன்னன் | **I** - பிரபோதசைதன்யர் |

37. இராமகிருஷ்ண மிஷனுடன் தொடர்புடையவர்
1) BAC 2) ABC 3) AEI 4) GHI

38. அற்புதங்கள் அதிகம் செய்தவர்
1) CFG 2) ABC 3) DEF 4) GHI

39. சைவசித்தாந்த தத்துவத்தை எடுத்துரைத்தவர்
1) CBA 2) BEH 3) DEF 4) IGH

40. சைவ மரபில்
1) சமயப் பணிகளுக்கு மட்டுமே இடமளிக்கப்படுகிறது.
2) சமயப் பணிகளுடன் சமூகநலப் பணிகளுக்கு முக்கியத்துவம்.
3) தனிமனித நலம் மேலோங்கி காணப்படுகிறது.
4) சமயம் சமூகம் வேறு எனக் கொள்ளப்படுகிறது.

(40 × 1 = 40 புள்ளிகள்)



kalvi.lk

# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)முன்னோடிப் பரீட்சை – 2017

| தரம் : 11 | சைவநெறி | நேரம் : 3.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண் : ..................................................................................... 22 T II

**கவனிக்க:**

- முதலாம் வினாவும் இரண்டாம் வினாவும் உட்பட ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.
- முதலாம் வினாவின் விடைக்கு 20 புள்ளிகளும் இரண்டாம் வினா உட்பட ஏனைய ஒவ்வொரு வினாவின் விடைக்கும்10 புள்ளிகள் வீதமும் வழங்கப்படும்.

## பகுதி - II

**(01) மேல் வரும் வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

1. சிவம் என்ற சொல்லின் பொருள் யாது?
2. சிவனின் மூவகை திருமேனிகளும் எவை?
3. சைவ சமயி உருவருக்கு இருக்க வேண்டிய பண்புகள் நான்கு குறிப்பிடுக.
4. முதல் முதலில் பஞ்சாங்கத்தை கணித்தவர் யார்? எழுந்த காலம் எது?
5. கும்பாபிஷேகத்தின் நான்கு வகைகளும் எவை?
6. சித்தாந்த அட்டகத்தை அருளியவர் யார்? அவற்றுள் அடங்கும் நூல்கள் இரண்டு எழுதுக.
7. நாட்டார் கலைகள் இரண்டைக் குறிப்பிட்டு அவற்றின் மூலம் பெறப்படும் நன்மைகள் இரண்டைக் குறிப்பிடுக.
8. சைவ சமயத்தை இழித்துரைத்த கிறிஸ்தவ பிரசுரங்களுக்குப் பதிலாக நாவலர் எழுதிய பிரசுரங்கள் இரண்டு எழுதுக.
9. விடியும் வரை விளக்குப் போல் ஆன்மாவுக்கு உதவுவது எது? அதிலிருந்து தோன்றுபவை எவை?
10. ஞான நெறியில் நின்ற நாயனார் யார்? அவர் கடைப்பிடித்த மார்க்கம் யாது?

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

**(02)** 1. மேல்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதுக.

2. அவற்றின் பொழிப்புரையை எழுதுக.
   (அ) "குனித்த புருவமும் கொவ்வை"
   (ஆ) "பாலுக்குப் பாலகன் வேண்டி...."
   (இ) "கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியை...."
   (ஈ) "சிந்திக்க லேன் நின்று....."
   (உ) "உண்ணுஞ்சோறு பருகு நீர்........"

($3+2 = 5 \times 2 = 10$ புள்ளிகள்)

**(03)** **"ஆன காலையில் ஆறு முகன் முகுந்தனும் மலரோனும்
வானு னோர்களும் இறைவனும் வழுத்தனர் மருங்காக
ஏனைய வீரர்கள் யாவரும் புடை வர இகல் பூதத்
தானை ஆர்வத்துடன் சென்றிடச் செரு நிலத் தணப்புற்றான்"**

1. இப்பாடல் இடம் பெறும் நூல் யாது? அதன் ஆசிரியர் யார்?
2. இங்கு ஆறுமுகனுக்கு அருகில் வணங்கியபடி வருகை தந்த தேவர்கள் மூவரின் பெயரைக் குறிப்பிடுக.
3. மேற்படி பாடலின் பொருளை எழுதுக. (2+3+5 = 10 புள்ளிகள்)

**(04)** **"முத்தமிழ் வித்தகர் விபுலானந்தர் ஆவார்"**

1. முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்பட்டமைக்கான காரணம் யாது?
2. இவர் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றிய பல்கலைக் கழகங்கள் இரண்டு தருக.
3. இவரது பணிகளை வகைப்படுத்தி கலைப்பணியை விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**(05)** **"பொறியின்றி ஒன்றும் புணராத புந்திக்கு
அறிவென்ற பேர் நன்றற"**

1. இப் பாடல் இடம் பெறும் நூல் எது? இதன் ஆசிரியர் யார்?
2. இந் நூல் எத்தனை அதிகாரங்களைக் கொண்டது? மேற் குறித்த பாடல் அடங்கும் பகுதி எது?
3. இங்கு புந்தி எனக் குறிப்பிடப்படுவது எது? இது எதனைக் கருவியாகக் கொண்டு அறிவைப் பெறுகின்றது?

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**(06)** **"கோபுர தரிசனம் கோடி புண்ணியம்"**

1. மூல மூர்த்தி சுயம்பு மூர்த்தியாக உள்ள இரண்டு விநாயகர் ஆலயங்கள் எவை?
2. திருக்கேதீஸ்வரத்தைப் போற்றிப்பாடிய நாயன்மார் இருவரைக் குறிப்பிடுக.
3. மிக உயரமான கொடித்தம்பம் உள்ள தான்தோன்றியீச்சரம் எது? இங்கு தேர்த் திருவிழாவின் போது நடைபெறும் சிறப்பு நிகழ்வுகள் இரண்டைக் குறிப்பிட்டு விளக்குக.

(2 + 3 + 5 = 10 புள்ளிகள்)

**(07)** **பின்வருவனவற்றுள் இரண்டுக்கு சிறு குறிப்புத் தருக.**

1. சைவ நாற்பாதங்கள்.
2. சைவ பரிபாலன சபை
3. கண்ணகி வழிபாடு
4. சைவ விழுமியங்கள்

($5 \times 2 = 10$ புள்ளிகள்)

Follow and Get papers Daily ..!

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page